DUPLICATE

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதி௵ (1889)
ஆவணி௴ ௨௨௳
ஆரம்பமானது.

பத்திரிக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ௵க்கு ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: „ ரூ. ௩-௨௫.
தொலைவாய்ப்பகுதி: „ ரூ. ௩-௭௫.
தனிப்பிரதி சதம் -0௫.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன் முறைக்கு:—	ஒருகலம்	௭-௫0.
„	அரைக்கலம்	௪-00.
„	கால்கலம்	௨-௫0.
„	ஒரு அங்குலம்	-௫0.

அடுத்தமுறைகட்கு ஷை விகிதங்களில் அரைவாசி.

புத்தகம் = ௩௨. யாழ்ப்பாணம் — ரௌத்திரி௵ ஆனி௴ ௧௮௳; ௧௯௨0 ம்ஆ ஜூலாய்௴ ௧௳. இலக்கம்—௧.

௨

கணபதி துணை.

சீர்பூத்த கருவிகா ணணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிட்டைபங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகன்றன் கணைகழல் வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ரூ. ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	௧0
இரண்டாம் பாலபாடம்	௧௫
மூன்றாம் பாலபாடம்	௨0
நான்காம் பாலபாடம்	௩0
ஐந்தாம் பாலபாடம்	௪0
ஆறாம் பாலபாடம்	௫0
கலாமஞ்சரி (இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல்லீவிங் சேர்ட்டிவிகேற்" வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது)	௫0
ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன்	௬
நமச்சிவாயமாலை, உரையுடன்	௬
வெற்றிவேற்கையுரை	௬
வாக்குண்டாமுரை	௬
நல்வழியுரை	௬
நன்னெறியுரை	௬
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)	௧௨
இலக்கண வினாவிடை...	௧0
நிகண்டு ௧௧-வதும ௧௨-வதும்	௨௫
திருவாதவூரடிகள்புராண மூலம்	௨௫
கிருட்டினன்றூது மூலமுமுரையும்... ...	௫0
திருச்செந்தூர்ப்புராணவுரை (கிளேஸ்காகிதம்) ரூ.௧-௨௫,(நல்காகிதம்)	௧-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் ...	௧0
கந்தசஷ்டி கவசம்	௫
சுப்பிரமணியசுவாமி விருத்தம்	௫
ஆறுமுகசுவாமி விருத்தம	௫
கதிரைமலைப் பேரின்பக்காதல்	௪0
பிள்ளையார்கதை	௧௨
பிரபஞ்சப் பெருவழக்கு	௪0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ...	௧0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) ...	௮
குமணசரித்திரம் „	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௫
சோமவாரவிரதமான்மியம்	௧0

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை கிரயமின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

சாலாமிஸ்ரி லேகியம்

1

இந்த லேகியத்தை யான் அநேகம் பேர்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாசித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாளு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, அத்தாவாரி, சீரமுள்ளிவிதை, நாகப்பூ, ஏலகபஸ்பம், அயகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு நருவருஷத்துள் உண்டாகிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகட்கு இந்த லேகியத்தைச் [illegible] மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரையிறாத்தலுக்கு ரூபா ௧0. கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொலைவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல 96 முதல் மருதானை. கொழும்பு.

பேசல்மிசன் ஓடுகள்.

உலகப்பிரசித்தியான இவ் வோடுகள் புதிதாய் அழைப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓடுகள் குணதிசயங்களை நன்குணர்ந்தவர்களாயுள்ளவர்களால மற்றைய ஓடுகளிலும் திறமானவையெனக் காணப்பட்டிருக்கின்றன. தட்டோடுகள், முகட்டோடுகள், அரையோடுகள், கால்ரோடுகள், தளவரிசைக்கற்கள் முதலியன இப்போதுஇருப்பிலிருக்கின்றன.

William Mather & Sons,
Agents
Basel Missien,
Tile Works.

8

விளம்பரம்.

பகைநாட்டாரின் கடன்களையேற்றுத்
தீர்க்குங் கந்தோர்.

பகைநாட்டாரின் கடன்களையேற்றுத் தீர்ப்பதற்காய் இந்த ஊரிலே கந்தோரொன்று வைத்தலைப்பற்றி 1920-ம் ௵ ஜூன் ௴ 9-ந் தேதியின் அறிவித்தலையும் ஷ ௴ 15-ந் தேதியின் அரசாட்சியாரின் "கெசெற்" நம்பர் 7,110 விசேஷ பத்திரிகையிற் பகைநாட்டார்க்குச்செல்லவேண்டிய கடன்களையும் அவர்களால் இறுபடவேண்டிய கடன்களையும் பற்றிப் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கும் விதிகளையும் உற்றுநோக்குவீராக.

விதிகளின் அச்சுப்பிரதிகளும் இந்த விஷயத்தைப்பற்றித் தேவையான அச்சிட்ட மாதிரித்தாள்களும் பகைநாட்டாரின் பொருட்களை யேற்கும் பொறுப்பாளியிடம் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாகும்; அவரே ஏற்றுத் தீர்க்குங் கந்தோரின் அதிகாரியாயிருந்துகொண்டுவார்.

உத்தமனது கட்டளைப்படி,
பீ. ஹோர்ஸ்பரோ,
ஆக்டிங் கலோனியல் சக்கிறத்தார்.
கொழும்பு கொலோனியல்சக்கிறத்தார் கந்தோர்,
1920-ம் ௵ ஜூன் ௴ 15௳. 98

புதிய கையொப்ப நேயர்கள்

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

"இந்துசாதன" மானேசர்.

சிவபூதராசப் பெருமான் கோவில்.

கிழமை ரௌத்திரி௵ வைகாசி௴ 19௳ இரவு 7-மணி வரையில், சுன்னாகம் தெற்கின்கண் எழுந்தருளியிருக்கும் சிவபூதராசப்பெருமான் கோவில் மண்டபத்தில் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் ஒரு சபைகூட்டப்பட்டது அக்கிராசனர் அச்சமையம் சிவபுண்ணியத்தைப்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்தனர். பின்னர் அவ்வாலயத் திருப்பணியை முற்றுவித்தற்கும் மற்றும் ஆகவேண்டியமுயற்சிகளைச்செய்தற்கும் ஆலோசனை செய்து அதற்கு மானேசராக ஸ்ரீ வே. பூதப்பிள்ளையவர்களையும், உபமானேசராக ஸ்ரீ சு. காசிப்பிள்ளையவர்களையும், தொலைவாய் இராச்சியப் பகுதிகளிலும் மற்றும் பகுதிகளிலுமுள்ள புண்ணிய சீலர்களிடம் பொருள் சேர்ப்பதற்கும் தனாதிகாரியாகவும் எம்மையும் இன்னும் ஆசாரக்த்திற்கு அங்கத்தவர்களாக ௭௨. மாசப்பூசை உபயக்காரர்களையும் நியமனஞ்செய்தனர். இச்சபையிற் கூடியிருந்து நியமனஞ்செய்தவர்கள் ஸ்ரீமத் சதாசிவக்குருக்கள், சுன்னாகம் சமஸ்கிருதவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ வி. சிதம்பராதசாஸ்திரிகள், சபாநாயகரவர்கள், ஸ்ரீ மு. வைத்தியநாதரவர்கள், உடுவில்விதானை ஸ்ரீ கா. முத்தப்பாஅவர்கள், தொலைவாய்ப்பகுதியில்வேலையாயிருந்து ஆறுதற் சம்பளம் பெறும் ஸ்ரீ ம. செல்லமவர்கள், மேற்படியூரில் வேலைபார்த்த ஸ்ரீ கு. அப்புத்துரையவர்கள், கந்தரோடை ஆங்கில வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ கா. சின்னத்தம்பியவர்கள், மேற்படி வித்தியாசாலை உபாத்தியாயர்கள் ஸ்ரீ வே. செல்லப்பா அவர்கள் ஸ்ரீ க. சோமசுந்தரமவர்கள், ஸ்ரீ சி. பொன்னம்பலமவர்கள், பிறக்கிறாசியார் ஸ்ரீ தி. குமாரசுவாமியவர்கள், மயிலணி உபாத்தியாயர் ஸ்ரீ ம. பொன்னு அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உபாத்தியாயர் ஸ்ரீ மு. சபாரத்தினசிங்கமவர்கள், உடுவில் ஆங்கில வித்தியாசாலை உபாத்தியாயர ஸ்ரீ கு. சிவசம்பு அவர்கள், ஸ்ரீ அ. காசிப்பிள்ளையவர்கள், சுதேசவைத்தியர் ஸ்ரீ சி. செல்லப்பா அவர்கள், ஸ்ரீ சி. சின்னப்பு அவர்கள், ஸ்ரீ வே. சங்கரப்பிள்ளையவர்கள் ஸ்ரீ ஆ. சுவாமிநாதரவர்கள், ஸ்ரீ மு. கனகசபையவர்கள் ஸ்ரீ அ. கனகசபையவர்கள் ஸ்ரீ வே. சின்னப்பா அவர்கள், ஸ்ரீ க. தம்பையா அவர்கள், ஸ்ரீ கா. செல்லப்பா அவர்கள், ஸ்ரீ க. சின்னப்பு அவர்கள், ஸ்ரீ ச. கந்தப்பரவர்கள் இன்னும் பலருமாம். எல்லார்மீதும் சத்தசாட்குண்ணிய திவ்யசொரூபராகிய எம்பெருமான் கருணைபுரிவாராக.

82 கா. அ. தியாகராசா.

பாழ்நிலங்களின் கட்டளைச்சட்டத்தைப்பற்றிய அறிவித்தல்.

(107)

இதன் பின்சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1920-ம் ௵ [ஜூன்] ஆனி௴ 18௳ துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897-ம், 1899-ம், 1900-ம், 1903-ம் ஆண்டுகளின் பாழ்நிலச் சட்டங்களின் 28- பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகஸ்தர் பிறடிறிக் லூயிஸ்துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடையகந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகஸ்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப் பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பிறடிறிக் லூயிஸ்,
விசேஷ உத்தியோகஸ்தர்.

குறிப்பு:—இக்காணிகளெல்லையிலுமுள்ள வழியுரிமை அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

குறித்த காணிகளின் விபரம்.

வடமாகாணம் மன்னார் டிஸ்திறிக் முசலிப் பிரிவு, முசலி தெற்கிலிருக்கும் விபரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள்:—

I. காட்டளவைப் பிரதமபடம், 5,192.

காணித்துண்டு.	காணியின் பெய.	விசால.ஏ.று.ப.
1	வேப்பல்சோலைக் காட்டுச்சேமிப்பு	17,086 3 11
4	கல்ஆறு	74 0 11
1½	றோட்டு	10 0 16
1⅓	சேமிப்பு	17 0 8
		17,188 0 6

எல்லைகளாவன:—வடக்கு - கல்ஆறு; கிழக்கு-வடமத்தியமாகாண எல்லை, பாழ்நிலக் கட்டளைச் சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட வேப்பல்சோலைக்காட்டுச்சேமிப்பு; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட வேப்பல்சோலைக் காட்டுச்சேமிப்பு; மேற்கு-முடிக்குரிய சோலைக்காடு, புத்தளத்திலிருந்து மன்னாருக்குப்போகும் குறுக்கு றோட்டு.

II. காட்டளவைப் பிரதமபடம், 5192.

காணித்துண்டு	காணியின் பெய.	விசால.ஏ.று.ப.
10	மொடறகம் ஆற்றின்பகுதி	38 3 32

எல்லைகளாவன:—வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட வேப்பல சோலைக்காட்டுச்சேமிப்பு; கிழக்கு-வடமத்தியமாகாணவெல்லை; தெற்கு-வடமத்தியமாகாணவெல்லை, (மொடறகம் ஆற்றின் பகுதி), வடமேன்மாகாண வெல்லை, (மொடறகம் ஆற்றின் பகுதி); மேற்கு-தொப்போ பிரதமபடம் 9 காணித்துண்டு 1 A:

அறிவித்தல் இல. 7,556 மன்னார் வி. உ. 5—1920.

அடைவுநகை விற்பனவுவிளம்பரம்.

110.

1893 ஆம் ஆண்டின் 8 ம இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண் மேற்கு சி. செல்லையாப் பத்தர் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

நம்.	தே	ரூபா.	அடைவுவைத்தவரின் ஊரும் பெயரும்.		அடைவுநகைகளின் விபரம்.
			1919-ம் ஆண்டு பங்குனி௴		
8	26	25	அம்பலவாணர் வேலுப்பிள்ளை	தட்டாதெரு	நீலக்கல்மோதிரம் 1
			சித்திரை௴		
42	8	20	முகம்மதுகசுகு செயினுபிள்ளை	சோனகதெரு	பொன்ஆரிக்கை 1 இலைப்புரோச் 1
63	16	8	வையாபுரிப்பத்தர்	தட்டாதெரு	பொன் சொண்டைப்பூ 1
71	26	12	அம்பலவாணர் ஆறுமுகம்	„	பட்டச்சிலைப்பு நீல ஒற்றை
			வைகாசி௴		
91	4	10	சின்னத்தம்பி சோமசேகரம்	வண் மேற்கு	பொன் குலைவைக்கடுக்கன் சோடி 1
95	6	8	சிதம்பரநாதர்மகம்பெண் செல்லமுத்து	„	பொன் தாயித்துக்கூடு 1
139	24	9	இராமு பொன்னையா	நாவடி	வெள்ளி அரைஞாண்கொடி
			ஆனி௴		
153	4	12	ஆறுமுகம் சின்னத்தம்பி	„	பொன் மூன்றுநாற்றட்டுமணி 1
155	6	20	இராமு பொன்னம்பலம்	வண் கிழக்கு	2 அரைத்தங்கப்பவுனும் மோதிரம்1-ம்
159	7	25	„	„	பொன் சதுரப் பட்டக்காப்பு ஒற்றை
171	17	10	முருகேசு வீரவாகு	சக்கரமடம்	பொன் தாயித்துக்கூடு 1
172	17	10	தம்பு முத்துக்குமாரு	சுண்டிக்குழி	வெள்ளிக் காற்சங்கிலி சோடி 1

விற்பனவு:—1920 ம் ஆண்டு ஜூலாய் மாதம் 14 ந் தேதிக்குச்சரியான ரௌத்திரி௵ ஆடி௴ 31௳ புதன்கிழமை பகல் பத்துமணிக்கு ஷை செல்லையாப் பத்தருடைய வீட்டிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார் (வெர்திஸ்மேஸ்தர்.)

ஆயுள்வேத ஔஷதாலயம்.

அமிர்தசஞ்சீவி சர்பத்.

இது நன்னாரிக்கிழங்கு, பறங்கிச்சக்கை, ஐயோடைய்ட், ரோஜாப்பூ முதலியசஞ்சீவி சரக்குகளினால் ஆயுள்வேத முறைப்படி செய்யப்பட்டது. இரத்தத்தைச் சுத்தி பண்ணி மூளையையும் நரம்புகளையும் ஜீவாதாரத்தையும் பெலப்படுத்தும்; பசியை யுண்டாக்கும்; அதிசாரத்தை அடக்கும், குண்டிக்காய், ஈரல், இரத்தாசயம், மூத்திரப்பை முதலிய இராசகருவிகளைப்பெலப்படுத்தி நன்னிலைமையில்வைக்கும். தேககாந்தியைக் கொடுக்கும்; சர்வரோகங்களை நீக்கும். ஜடசக்தியை மிகவும் உண்டாக்கிக் கண்ணுக் கொளியையும் குளிர்ச்சியையுங் கொடுக்கும்.

பிரமாணம்:—½ அவுன்ஸ் - போதியசுத்தசலத்தில் கலந்து சாப்பாட்டின் பின்னாவது முன்னாவது சாப்பிடலாம்.

விலை:—ஒரு முழுப்போத்தல் ரூபா 4-00.
அரைப்போத்தல் ,, 2-10.
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கல்நார் தந்தசூரணம்.

இது பற்களைக் கெட்டிப்படுத்தி முரசை வளரச்செய்வதில் நிகரற்றவுடதமாகிய கல்நாரிலே செய்யப்பட்டது. பற்களை வெண்மையாக்கி, பல்வலி, இரத்தம்வடிதல், முரசுகரைதல், வாய்நாற்றம் முதலிய ரோகங்களை வெகு சுலபமாக நீக்கிவிடும்.

விலை:—டப்பி ஒன்றுக்கு சதம் 50.

அயுள்வேத ஔஷதாலயம்,
பெரியகடைத்தெரு,
22. வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்:

விளம்பரம்.

வைத்தியகந்தோர் ஒப்பந்தங்கள்.

1920-ம் ஆண்டு ஐப்பசி௴ 1௳ தொடக்கம் ஒருவருஷத்திற்கு பின்வரும் ஆஸ்பத்திரிகளுக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுக்கிறதற்கு கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

மிகுந்தலே, நுவரெலியா, கல்முனை, குஷ்டரோக வைத்தியசாலை, மகாறு வைத்திய ஆஸ்பத்திரி.

கேள்விப்பத்திரக் கடுதாசிகள் பிரதம சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டும். 1920-ம் ஆண்டு ஆடி௴ 13௳ பகல் 12 மணிக்கு முன் கேள்விப்பத்திரங்கள் ஒப்பந்த விசாரணைக் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த திகதி நேரத்திற்குப் பின் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இன்னும் வேண்டிய விபரங்கள் கவண்மேந்துக் கசற் பத்திரிகை மூலமாயுஞ், பிரதம சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்தும் அறிந்துகொள்ளலாம். (105)

அட்டபந்தன மருந்து.

112

அஷ்டபந்தன மருந்து இந்தியாவிலிருந்து நல்லமுதல்தரச் சரக்காக அழைப்பித்துச் சுத்தமாகச் செய்த மருந்து என்னிடம் விலைக்கு இருக்கின்றது. வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ச. வைத்தியநாதக் குருக்கள்,
சிவன்கோவில் வடக்குவீதி,
வண்ணார்பண்ணை.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்: ரௌத்திரிவரு ஆனி௴ ௩௨௳

நமது பத்திரிகை.

நமது இந்துசாதனத்தின் முப்பத்தொராம் புத்தகம் பூர்த்தியாக, இற்றைப் பிரசுரத்துடன் முப்பத்திரண்டாம் புத்தகம் ஆரம்பமாகின்றது. இப்பத்திரம் ஆரம்பமான காலந்தொடக்கம இதுவரையும் காலந்தோறும் விருத்தியெய்தி வருகின்றதென்பது பத்திராபிமானிகளுட் பெரும்பாலார் அறிந்த விஷயமாகும். ஆரம்பத்தில் 'டெமி' எனப்படும் சிறிய பிரமாணத்தில் பாதி ஆங்கில பாஷையிலும் பாதி தமிழ்ப்பாஷையிலுமாக வெளிவந்த இப்பத்திரிகை பின்னர் ஆங்கிலப் பிரசுரம் வேறாகவும் தமிழ்ப்பிரசுரம் வேறாகவும் அதே டெமிப் பிரமாணத்தில் பட்சத்துக் கொருமுறை வெளிவரலாயிற்று. பின்னர் 'றோயல்' எனப்படும் பெரிய பிரமாணத்தில் ஆங்கிலப்பிரசுரம் வாரமொருமுறையும் தமிழ்ப் பிரசுரம் பட்சத்துக் கொருமுறையும் வெளிவரலாயின. இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் தொடக்கம் தமிழ்ப்பிரசுரம் வாரமொருமுறையும் ஆங்கிலப் பிரசுரம் வாரமிருமுறையும் வெளிவரலாயின. இப்பத்திரம் ஆரம்பமான காலந் தொடக்கம இன்று வரையும் இறைவனருளாலும் சமயாபிமானமுள்ள பத்திராபிமானிகளுட் பெரும்பாலாரின் பேருதவியாலும் யாதும் முட்டின்றி இனிது நடைபெறலாயிற்று. இம்முப்பத்தொரு வருட கால எல்லையுள் வேறு எத்தனையோ பத்திரங்கள் காலந்தோறுந் தோன்றிச் சிலகாலம் நடைபெற்றுப் பின்னர் பேருமின்றி மறைந்துபோனமையை யாம் நேரே கண்டிருக்கின்றனம். இப்பத்திரமோ அங்ஙனமின்றி நமது சமயத்தின் பொருட்டும் சாதியின்பொருட்டும் தேசத்தின்பொருட்டும் பாஷையின் பொருட்டும் உழைத்துவருதல் தமிழுலகத்தார் அனைவருக்கும் அவருள்ளும் விசேஷமாக சைவ சமயத்தினர்க்கு மிகவும் பெருமையல்லவா? அக்காலந் தொடக்கமாக ஏழைகளும் இப்பத்திரத்தைப் பெற்று வாசித்துப் பயனடைய வேண்டுமென்னும் நோக்கமாகவே குறைந்த கிரயம் இப்பத்திரத்துக்கு விதிக்கப்பட்டிருக்கின்றது. நிகழ்ந்த பெரிய யுத்தங் காரணமாக அச்சுக்குரிய காகிதம் மசி முதலிய உபகரணங்க ளெல்லாம் பன்மடங்கு விலையேறிவிட அதனால் எத்தனையோ பத்திரங்கள் வெளிவராதொழிந்தன. சில சிறிய உருவத்துடன் வெளிவரலாயின. தினப் பிரசுரமாயிருந்த பத்திரங்கள் சில வாரமொருமுறை இருமுறை வெளிப்படத் தலைப்பட்டன. பல பத்திரிகைகளின் கிரயம் கூட்டி விற்கப்பட்டன. இங்ஙனமெல்லாமிருப்பவும் நமது இந்துசாதனத்தில் இப்படிப்பட்ட மாறுதல் ஒன்றுஞ் செய்யப்படவில்லை. செய்யாது விடுத்ததின் காரணமோ இவ்விலங்கையின் சைவசமயிகள் பொருட்டு வெளிவரும் பத்திரிகை இது ஒன்றேயாகுமென் றெண்ணியே. ஆனால் நமது பத்திராபிமானிகளுள் சிலரொழியப் பலர் எக்காரணம்பற்றியோ யாமறியேம் இப்பொழுது அலட்சியமாயிருக்கிறார்கள். நிகழும் பஞ்சங் காரணமாக, எத்துணைச் செல்வராயிருந்தாலும் எவர்கட்கும் வசதியீனங்களுண்டென்பதை யாம் மறந்துபோகவில்லை. எத்துணை இடர் வந்தாலும் நம்மவர்கட்கு விசேஷநன்மையைத் தந்துகொண்டுவரும் இவ்விஷயத்தை யாம் இடையிலே முட்டுற விடுவது முறைமையல்லவே. நமது பத்திராபிமானிகளை விசேஷமாக ஏதும் திரவியசகாயம் புரியும்படி யாம் கேட்கவில்லை இப்பஞ்சகாலத்தில் தங்களால் வரவேண்டிய பாக்கிப்பணத்தையும்உதவி அவ்வவ் வருஷத்துக்குரிய பத்திரக் கிரயத்தையும் வருடந்தோறும் முற்பணமாக அனுப்பி புதியவர்களாகச் சில பத்திராபிமானிகளையுஞ் சேர்த்து உதவுவார்களாயின், இப்பத்திரம் யாதும் முட்டின்றி நடைபெற்றுக் காலகதியில் அதிகவிருத்தியும் அடைந்து வரும். நோயுற்றபோதே ஔஷதம் வேண்டும்; பசியுற்றபோதே உணவு வேண்டும். அதுபோல இப்பத்திரிகை தளர்வுற்றிருக்கும் இச்சமையத்திலேயே அபிமானிகளுடைய பேருதவியும் வேண்டும் ஆதலால் சைவாபிமானிகளெல்லோரும் இச்சமையத்தில் இப்பத்திரிகை விஷயமாகச் செய்யக்கூடிய சகாய மெவையோ அவைகளைச் சிறிதும் லோபமின்றிச் செய்துவருவார்களென மிக்க ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கின்றேம்.

அரசாங்கத்தார் தமிழ்ப்புலவரைச் சங்மானித்தல்.

அரசர்களும், பிரபுக்களும் வித்துவான்களைச் சன்மானித்தலாகிய வழக்கம் தொன்றுதொட்டு இந்நாள்காறும் எல்லாச் சாதியாராலும் எல்லாச் சமயத்தாராலும் எல்லாப் பாஷையினராலும் அநுசரிக்கப்பெற்று வரலாயிற்று. விக்கிரமாதித்திய அரசன், ஆரியத்தில் வல்ல காளிதாசன் முதலாம் நவரத்தினங்களைத் தன் மாளிகையில் வைத்துத் தக்கவாறு உபசரித்துவந்தான். மொகல் வம்சத்தவராயினும், இந்துக்கள் மகமதியரென்னும் பேதமின்றித் தம் பிரஜைகளை, நீதியோடு பரிபாலித்த அக்பார் சக்கரவர்த்திகாலத்தில் அவரது அரண்மனையிலேயே பல வித்துவான்களிருந்து அரிய நூல்களை இயற்றியதாக இந்தியசரித்திரங் கூறுகின்றது. குமணராசன் பெருந்தலைச்சாத்தனார் என்னும் பாவலர் பொருட்டுத் தன் தலையை யரிந்து கொடுக்க முயன்றான். கம்பர் காளமேகம் ஒட்டக்கூத்தர் புகழேந்தி இரட்டையர் பொய்யாமொழி முதலாம் எண்ணிறந்த புலவர்கள் சேர சோழ பாண்டியராலும் மற்றுஞ் சிற்றரசர்களாலும் பிரபுக்களாலும் சன்மானிக்கப்பட்டுவந்தனர். இலங்கையைப் பரிபாலித்துவந்த சிங்கள மன்னரும், யாழ்ப்பாணத்தையாண்டுவந்த தமிழ்வேந்தரும் காலந்தோறும் வித்துவான்களை ஆதரித்து அவர்களைக்கொண்டு லோகோபகாரமான பல அரிய நூல்களை இயற்றுவித்துவந்தார்களென்பது இலங்கைச் சரித்திரம் யாழ்ப்பாணவைபவம் முதலிய சரித்திர நூல்கள் மூலமாகவும் கர்ணபரம்பரையாகவும் அவர்கள் செய்த நூல்களைக்கொண்டும் அறியத்தக்கது.

இங்ஙனமே, மேலைத்தேசத்திலும் ஒவ்வொரு இராசாங்கத்திலும் அக்காலந் தொடக்கம் இக்காலம் வரையில் சமஸ்தான வித்துவான்களிருந்துவரலாயினர். வித்துவானில்லாத சபை சிறப்படையாதென்பது எல்லார்க்கும் ஒத்த துணிபு.

இவ்விலங்கை அந்நிய மன்னர் கைப்படவே செந்தமிழுங் குன்ற செந்தமிழ்ப் புலவர்களும் அலட்சியஞ்செய்யப்படலாயினர். இற்றைக்கு ௩00 வருடங்கட்கு முன் இங்கு வந்து இந்நாட்டை யாண்ட பறங்கியர் தமிழ்ப் பாஷைக்கு அநுகூலமான வழிகளை அநுசரியா தொழிந்ததுமாத்திரமன்றிப் பிரதிகூலமான மார்க்கங்களைக் கைக்கொண்டு பேரிடர் விளைத்தனர். பின்வந்த ஒல்லாந்தரும் அவ்வாறே செய்தனர். இவ்விலங்காதிபம் மகிமை வாய்ந்த ஆங்கிலர் கைப்பட்ட பின்னரே சமயசுதந்திரம் முதலியனவின்றிப் பிரஜைகள் வாழத் தொடங்கினர். தமிழ்க்கல்வி விஷயத்திலும் நமது அரசாங்கத்தினர் தக்க உதவிசெய்து வந்தார்கள், வருகின்றார்கள். இந்திய அரசாங்கத்தார் இதற்கு முன்னும் தமிழ் வித்துவான்களைச் சன்மானித்து வருகின்றனரேனும் இலங்கை அரசினர் இவ்விஷயத்தில் அலட்சியமாகவேயிருந்தனர். ஆனால் சில மாசங்கட்கு முன்னர் கௌரவஸ்ரீ க. பாலசிங்கமவர்கள் சட்டநிரூபணசபையிற் பேசும்போது மேலைத் தேசத்திலுள்ள வித்துவான்கட்கும், நூலாசிரியர்கட்கும் அரசினர் பட்டங்கள் அளித்துச் சன்மானஞ் செய்து வருகின்றனரென்றும், இவ்விலங்கையை அரசுபுரிந்த பூர்வ மன்னரும் இங்ஙனஞ் செய்துவந்தாரென்றும், இப்பொழுது இலங்கை யரசினர் இதுமாத்திரம் அங்ஙனஞ் செய்யாதிருத்தற்குக் காரணம் என்னவென்றும், அங்ஙனஞ் செய்வார்களாயின், இலங்கை வாசிகள் அரசினிடத்து அதிகநன்றியும் பத்தியும்பாராட்டுவாரென்றுங் கூறினர்.

இலங்கை அரசினர் கௌரவஸ்ரீ க. பாலசிங்க மவர்களின் பிரேரேபணைக்கு இயைந்து இலங்கையிலுள்ள தமிழ்ப்புலவர்களுள் ஒருவரையாயினுஞ் சன்மானித்தற்கு உடன்பட்டனர். அரசினர் இவ்விஷயமாகக் கொண்டிருக்கும்அபிமானத்தின் பொருட்டுத் தமிழகத்தினராகிய யாமெல்லாம் அரசினரிடத்து மிகவும் நன்றிபாராட்டவேண்டும். இன்னும் ஒரு [illegible] சொல்லத்தக்கது. இந்தியாவில் அரசாங்கத்தினர் இவ்விதமான சன்மானஞ் செய்யப்புகுஞ் சமையத்தில் ஒரு பட்டமும் உதவுவது வழக்கமாகும். சென்னை அரசினர் கல்லூரி (Madras Presidency College) த் தமிழ்ப் போதகாசிரியராகிய ஸ்ரீமத் சுவாமிநாதஐயரவர்கட்கு இங்ஙனஞ் செய்யப் புகும்போது மகோமகோபாத்தியாயர் என்னும் பட்டத்தையும அளித்தனர். மைசூர் அரசாங்கத்தார் "பண்டித சிரோமணி" என்னும் பட்டமளிப்பது வழக்கம். அப்படியே இலங்கை அரசாங்கத்தினருஞ் செய்வார்களாயின் அது மிகவும் விசேஷமாகும்.

உலகத்திலே எத்துணை அரிய தொழிலாகவிருந்தாலும், அத்தொழிலுக்கு ஒரு வகையான சன்மானமுமில்லையாயின் அத்தொழில் அபிவிருத்தியடையாது காலகதியிற் குன்றிவிடுதல் சகசமாகும். சன்மானிக்கப்படுந் தொழில் வரவா விருத்தியெய்திக்கொண்டேவரும். இந்நியாயம் பற்றியே இக்காலத்தில் நமது செந்தமிழ் தேய்வுற, ஆங்கிலம் நமது நாட்டில் இத்துணை விருத்தியடையலாயிற்று. தாம் அந்நியராயினும் தமது பிரஜைகளின் பூர்வீக பழக்க வழக்கம் சமயம் பாஷை முதலான இவைகட்கு யாதும் பங்கம் நேராதபடி பரிபாலனஞ் செய்பவர்களே நீதிமன்னராவார். நமது சமயாசாரம், சாதியாசாரம் என்னுமிவற்றிற்கு யாதும் பங்கம் நேரவொண்ணா தென்னும் நல்லெண்ணத்துடன் நம்மைப் பரிபாலித்து வந்த ஆங்கில அரசினர் இப்பொழுது நமது அரிய தமிழ்ப் பாஷையையும் வளர்க்கவேண்டுமென வெண்ணங்கொண்டமை முறைமையேயாம்.

நிற்க, மகிமைதங்கிய இலங்கை அரசினரால் இப்பொழுது முதன்முதற் சன்மானிக்கப்பெற்று விளங்குபவர் சுன்னாகம்

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்

இவருக்கு இவ்வருடந் தொடக்கம் வருடந்தோறும் உ௫0 ரூபா சன்மானமாக உதவுவதற்கு இலங்கை அரசாங்கத்தார் நிச்சயித்திருக்கின்றனர். இவரது கல்வித் திறமையைத் தமிழகத்தார் நன்கு அறிந்துள்ளனரெனினும் இச்சமையத்திற் கூறவேண்டுமென்னும் நியதிபற்றிக் கூறுகின்றாம். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சந்தேக விபரீதமின்றிக் கற்றுணர்ந்தவர். வடமொழிப்பயிற்சியும் உடையவர். தமிழகத்தார்க்குப் பயன்படும் வண்ணம் பல நூல்கட்கு உரையெழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். கண்ணகி சரித்திரம், புலவர் சரித்திரம் முதலியன இவர் தமிழில் எழுதிய வசன நூல்களாம். இவரியற்றிய இலக்கியச் சொல்லகராதி தமிழ் மாணவர்கட்குப் பெரும் பயன் தருவ தொன்றாகும். தொன்னூலாசிரியர்களையும் உரையாசிரியர்களையும பின்பற்றியே தாமும் நூல்களையும் உரைகளையுஞ்செய்வதன்றி இக்காலத்தார் சிலர்போல விபரீதப்பிரயோகங்களும் நூதன கொள்கைகளும் இவரிடத்திலவாகும். மதுரையிற் பிரசுரமாகுஞ் செந்தமிழ்ப் பத்திரத்துக்கு இவர் காலந்தோறும் எழுதியுதவும் விஷயங்கள் மிகநன்மை வாய்ந்தன. யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி இந்தியாவிலும் தமிழ்மக்களால் இவர்புகழ்ந்து பேசப்படுவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது யாழ்ப்பாணஞ் சைவப்பிரகாசவித்தியாசாலையில் உயர்தரக்கல்வி பயிற்றும் பிரதமாசிரியராக நெடுங்காலம் அமர்ந்துள்ளார். இங்குள்ள தமிழறிஞர்களுட் பலர் இவர் மாணாக்கராகவுள்ளனர். போலிப் புலவர்கள் வித்துவான்கள் நாவலர்கள் பண்டிதர்கள் போன்ற இடம்பமான நடையுடை பாவனை இவரிடத்திற் கிடையா. சுருங்கச்சொல்லுகில் இக்காலத்தில் இவருக்கு நிகரான தமிழ் வித்துவான்கள் சிலரினுஞ் சிலராவர். புலவரவர்கள் அரசினர் செய்து வருஞ் சன்மானத்துடன் இனிது வாழ்ந்துகொண்டு இன்னுந் தமிழகத்தார்க்குப் பயன்றரும் பல நூல்களை வெளியிடும் வண்ணம் எம்பெருமான் திருவருள் முன்னிற்பதாக.

நீதிபோதம். ௨௮

சோமேசர் முதுமொழி வெண்பா.

கூடாவொழுக்கம்.

மாயன்வே டங்கொண்டே வன்சலந்த
ரன்கிழத்தி, தூய நலங்கவர்ந்தான் சோ
மேசா—வாயின், வலியி னிலைமையான்
வல்லுருவம் பெற்றம் புலியின்றோல்
போர்த்து மேய்ந் தற்று.

ப-ரை: மாயன் - விஷ்ணு, வேடங்கொண்டு-சலந்தரனுடைய வேடம்பூண்டு, வன் சலந்தரன் கிழத்தி-வலிய அச்சலந்தராசுரனது மனைவியின், தூய நலம் கவர்ந்தான் - கற்பின் நலத்தை (ப்பங்கப்படுத்தி) இன்ப மனுபவித்தார், சோமேசா - சோமேசரே, ஆயின்-ஆராயின், வலி இல் நிலைமையான் - மனத்தையடக்கும் வலிமை யில்லாத இயல்பையுடையவன், வல்லுருவம் அவ்வல்லமையுடையவரது வேடத்தைக்கொண்டு, (மனம்போன வழியொழுகுதல்), பெற்றம்-பசுவானது, புலியின் தோல் - புலியினது தோலை, போர்த்து மேய்ந்தற்று-போர்த்துக்கொண்டுமேய்ந்தவாறாம்-

க-ரை: திருமால் சலந்தரன் போல் வேடங்கொண்டு அவன்மனையாளிடம் இன்பந்துய்த்தார் ஆதலால் தவவலிமையில்லாதவனது பொய்வேடமானது புலித்தோலைப்போர்த்த பசுவின் செயலை நிகர்க்குமென்பதாம்.

இச்சரித்திரத்தை ஈண்டு கூறாதொழிந்தாமாதலிற் கந்தபுராணத்திற் கண்டுகொள்க.

சமாச்சாரம்.

மகோற்சவம்:—ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலில் இன்று துவஜாரோகணமாகி மகோற்சவம் சிறப்புற நிகழும்.

சுப்பிறீங்கோடு.—ஆடிமாசச் சுப்பிறீங்கோட்டு விசாரணை இங்கு வருகிற திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் சரஸ்வதிவிலாசசபை:—இச்சபையார் வருகிற சனிக்கிழமை அரிச்சந்திரநாடகம் மயானகாண்டம் முற்றவெளியிலுள்ள றிஜ்வே மண்டபத்தில் நடத்தத் தீர்மானித்திருக்கின்றனர்.

ஐந்துசத நாணயம்:—பம்பாயிலிருந்து சென்றவாரம் கொழும்புக்குவந்த "டில்வரு" என்னுங் கப்பல் தனித்தனி 700 ரூபா பெறுமதியான ஐந்துசத நாணயங்கள்கொண்ட 28 பெட்டிகளை யேற்றிக்கொண்டுவந்தது.

பொலிஸ்கோடு:—யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதிமெஸ் விக்கிரமசிங்கிஅவர்கள் லீவிற் செல்வதால் நாளை தொடக்கம் சில நாட்களுக்கு யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை மல்லாகம் என்னுமிடங்களிற் பொலிஸ்நீதிபதியாக அத்துவக்காத் ஸ்ரீ. S. கனகசபையவர்கள் கடமைபார்ப்பார்கள்.

அரிசி விலை:—இன்று தொடக்கம் றங்கூன் பச்சையரிசி பறைவெட்டி படியொன்று 33 சதத்திற்கு மேற்படவும், கட்டரிசி படியொன்று 31 சதத்திற்குமேற்படவும் எவராவது விற்கவொண்ணாதென வடமாகாண ஏசண்டரவர்கள் விளம்பரஞ் செய்திருக்கின்றனர். வியாபாரிமாருக்கு ஒருமூடை பச்சையரிசி ரூபா 25 சதம் 54 ஆகவும், கட்டரிசி 23 ரூபா 40 சதமாகவுங் கொடுக்கப்படும்,

உலகத்தில் மிகப் பெரிய ஆகாயரதம்:— விக்கார் கம்பனி யென்னு மொரு கம்பெனியார் உலகத்திலே தற்காலத்திலுள்ள எல்லாவகையான ஆகாயரதங்களுள்ளும் பெரிய ரதமொன்றைச் செய்திருக்கின்றனராம், இது அலுமினியம் என்னும் லோகத்தால் ஆக்கப்பெற்றது. 520 அடி நீளமும் 80 அடி உயரமுமுள்ளது. மணித்தியாலம் 65 மைல் விகிதம் 4000 மைல் தூரத்திற்கு ஒரே முறையிற் செல்லத்தக்கதாம்.

நெற்செய்கை.—கீழ்மாகாணத்திலே நெற்செய்கைக்காக பெருமுயற்சிகள் நடக்கின்றன, தெம்பிற்றியா குளத்திலே தொளாயிரம் ஏக்கர் நிலமும் வெளிச்சைக் குளத்திலே இரண்டாயிரம் ஏக்கர் நிலமும் கீழ்மாகாணத்திலே புதிதாக ஆக்கப்பட்ட கொம்பனிகளுக்கு அரசாட்சியார் கொடுத்துவிட்டனர். இதுவரையிலே இருபத்தையாயிரம் ஏக்கர் நிலம் நெற்செய்கைக்குக் கொடுக்கப்பட்டது. இன்னும் அங்கே நெற்செய்கைக்கான நிலங்கள் தரவேண்டுமென்று உணவுப்பொருட் சமக்ஷைத் தலைவர் அரசாட்சியாரைக் கேட்டிருக்கின்றார்.

கோதுமை.—சோறு சாப்பிடுகிறவர்களுக்கு வந்த பஞ்சம்போல கோதுமை அப்பம் சாப்பிடுகிறவர்களுக்கும் பஞ்சம் வருகின்றது. அவுஸ்திறேலியாவிலிருந்து வருகிறவருடம் நடுக்கூற்றுவரையுங் கோதுமை வாராதாம். இந்தியாவிலிருந்து வந்துகொண்டிருக்கதையும் அரசாட்சியார் மட்டுப்படுத்தி மாசமொன்றுக்கு 7,500 சாக்கு மா மாத்திரம் அனுப்பலாமென்று நிருபித்துவிட்டனர். இலங்கையிலோவெனில் மாசமொன்றுக்கு பதினையாயிரம் சாக்கு மா செலவுக்கு வேண்டியிருக்கிறது. இனி அப்பம் தின்ன வழியில்லையே யென்று அரசாட்சியாரிடம் விண்ணப்பம்பண்ணவேண்டிவருகிறது.

சதுமலை புவனேஸ்வரி அம்மன்கோயில்:— மிகப் புராதனமான இவ்வாலயஞ் சிலமுற்றிருந்தமையைக் கண்டு சதுமலையை ஜநநஸ்தானமாகவுடையவரும், வண்ணார்பண்ணையை வாசஸ்தானமாகவுடையவரும், பேர்பெற்ற ஆயுர்வேத வைத்தியருமாகிய ஸ்ரீ. ச. முத்தர்குமாரு அவர்கள் இற்றைக்கு ஐந்து வருடங்கட்குமுன் இக்கோயிலைப் புதுக்குவிக்க நினைத்து திருப்பணியை ஆரம்பித்துத் தமது பொருள்கொண்டும் பிறர் உபகரித்த பொருள்கொண்டும் ஒருவாறு நிறைவேற்றியுள்ளனர். வைத்தியரவர்கள் தெய்வபத்தி மெச்சத்தக்கது. நிகழும் ஆனிமீ ௨௪வ (8-7-20) வியாழக்கிழமை வருஞ் சுபமுகூர்த்தத்தில் இவ்வாலய சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நிகழும். ஆகலால் அத்தருணம் சிவபத்தர்கள் அங்குச் சென்று சுவாமிதரிசனஞ்செய்து போதல் மிக விசேடமாகும்.

தேகவியோகம்.

அளவெட்டி ஸ்ரீ. குமாரவேற்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரி ஸ்ரீமதி காசபூஷணியம்மாள் சென்ற வைகாசிமீ 30வ தம்மைப்பீடித்த சுரநோய் காரணமாக தேகவியோகமாயினர். இவர் இராமநாதவித்தியாலயத்தில் ஆங்கிலமுந் தமிழும் நன்கு கற்றுவந்தவர். சமயவொழுக்கம் பெரிதுமுடையவர். இக் கன்னிகையை அகாலத்திற் பறிகொடுத்துத்துன்புறும் பெற்றோர் சுற்றமித்திரர்களுடன் யாமும் பெரிதும் அனுதாபமுறுகின்றோம். கடித.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

ஸமரச போதினி:—இது தஞ்சையினின்றும் நவீனமாக வெளிவரும் ஒரு தமிழ் வாரத்தப் பத்திரிகை. இதன் பத்திராசிரியர் ஸ்ரீ. E. சூரியநாராயண ஐயர் B.L, B.A இந்துக்களும் ஏனைய சாதிபத்தார்போலப் பூரண சுய ஆட்சியடையவேண்டுமென்பதையே இது விசேஷமாகப் போதிப்பது. மற்றும் உலகசமாசாரங்களும் இதனகத்து அமைந்துள்ளன. இது ராயல் காகிதத்தை நான்காக மடித்த பிரமாணத்தில் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டது. இதன் கிரயம் வருடமொன்றுக்கு ரூபா 5. எமக்கனுப்பிவரும் பத்திரிகைகளை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு யாமும் எமது பத்திரத்தைப் பிரதியாக அனுப்புகின்றேம்.

தந்திச் சமாச்சாரம்.

இத்தலியர் யுத்தநஷ்டம் வேண்டிநிற்றல்.

ஜர்மனியர் ஐக்கியநாட்டரசாங்கத்தாருக்குக் கொடுக்கவிருக்கும் நஷ்டத்தில் நூற்றுக்கு 20 விகிதம் தமக்குத் தரவேண்டுமென இத்தலியர் கேட்கின்றனராம்.

அயர்லாந்துக்கலகம்.

ஜூன்மீ 21வ.

லண்டனடெரி என்னுமிடத்திற் பின்னரும் கலகம்நடந்தது. கலகக்காரர் கடைகளின் சாளரங்களை உடைத்து பொருட்களைக்கொள்ளைகொண்டனர். தீப்பற்றி யெரிந்துகொண்டிருந்த கடையின் தீயை அவிக்கும்படி பொலிசர் சென்றபோது கலகக்காரர் அவர்களை அடித்துத்துரத்தி அவர்கள் கொண்டுவந்த நீர்விசிறும் யந்திரத்தையும் உடைத்துவிட்டனர் இப்பொழுது அப்பட்டினத்தில் இயங்கும் யந்திரமில்லையாம். வொலன்டியர் சைனியத்தைச் சார்ந்த ஒருவன் இன்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டான்.

பார்லிமென்டில் லண்டன்டெரிக் கலகத்தைக் குறித்துக்கேட்டபோது இக்கலகத்தில் ஊரவர்களுள் 9 பேர் மாண்டனரென்றும் 15 பேருக்கு மேல் 30 பேருக்குட்பட்டவுள்ள தொகையினர் காயமுற்றனரென்றும், ஆதர்காம் பெல் என்னுஞ் சேனபதி இக்கலகத்தை யடக்குதற்கு முழுத் தத்துவத்தோடும் அனுப்பபட்டிருக்கின்றனரென்றும், சைனியம்போதாதெனக்கண்டால் இன்னும் வேண்டிய சைனியம் அவருக்கு அனுப்பப்படுமென்றும்பொனர்லா கூறினர்.

ஜூன்மீ 22வ.

லண்டன்டெரியில் நேற்றுத்தொடக்கம் மிகப்பயங்கரமான சம்பவங்கள் நிகழ்கின்றன, ஆண்கள் வீதியில் துப்பாக்கியேந்திக் கண்டபடி குண்டுப்பிரயோகஞ்செய்துகொண்டு தெருவழியே திரியலாயினர். மோட்டாரதம் ஓட்டுவோர் வேலைநிறுத்தஞ்செய்துவிட்டமையால் காயக்காரரை வைத்தியசாலைக்குக் கொண்டுபோதல் முடியாமலிருக்கின்றது. அதிகாலை 5 மணிதொடக்கம் நடுச்சாமம்வரையில் இடையிடையேகுண்டுப் பிரயோகங்கள் கேட்டன. கலகக்காரர் லண்டன்டெரித் தேசாதிபதியின் மருகனாகிய மக்கே யென்பவரை அநியாயமாகக் கொன்றுவிட்டனர் இவர் ஜர்மனிய யுத்தத்தில் நின்று சமர்செய்து விருதுபெற்றவர். விடுதலைநாட்களைக் கழிக்கும்படி தமதூரில் தங்கியிருக்குஞ் சமயத்தில இக்கலகக்காரர் அவரைச்சந்தித்து சில கோட்டாக்களைப் பற்றிய சங்கதிகள் கேட்க இவர் சொல்லாது மறுக்க கலகக்காரர் அவரது கால்கைகளைக் கட்டி வாய்க்குட் துணி வைப்பித்து சுட்டுக்கொன்றுவிட்டனர். 3 மணித்தியாலங்களாக பிரேதம் தெருவோரத்திற்கிடந்து, பின்னர் பிதாவின்வீட்டிற்குக் கொண்டுபோகப்பட்டது இக்கொலைகாரணமாகவே யுத்தம் இப்பொழுது மும்முரமாக நடக்கின்றது.

கலகக்காரர் 5 பொலிசாரை வழிமறித்துத்தாக்கி ஒருவனைக் கொன்றுவிட்டனர் 3பேர் காயமடைந்தனர்.

ஜூன்மீ 23வ.

கலகம் வரவர அதிகப்படுகின்றது. புகைரதஞ் செலுத்துவோர் பொலிஸ்மார் அல்லது போர்வீரர்கள் வண்டியிலிருந்து பொருட்களை இறக்குதற்குச் சென்றால் உடனே வண்டியை விட்டகன்றுவிடுகின்றனர். லண்டன்டெரியிற் கிரமையான யுத்தம் நிகழ்வதாகச் சமாச்சாரங்கள் வருகின்றன. காயமடைந்தோர் ஐவர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். பலர் காயத்துடன் தெருவழியே கிடப்பதாகச் சொல்லப்படுகின்றது.

ஜூன்மீ 24வ.

லண்டன்டெரியில் கலகக்காரருள் 5 பேர் கொல்லப்பட்டனர். 1000 சேனைவீரர் புதிதாக வந்திருக்கின்றனர். ஒரு டிஸ்றோயர் கப்பலும் ஆற்றிற் கட்டப்பட்டிருக்கின்றது. தகப்பனும் மகனும் மனைவியுமாகிய மூவர் ஒருங்கு சுடப்பட்டனர். பொலிசர் ஏறிய புகைவண்டியைச் செலுத்தற்கு மறுத்ததற்காக லிமறிக் என்னுமிடத்தில பல புகைவண்டியோட்டுவோர் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டனர்.

போல்ஷ் சாதியார்.

வெயில் ஒடெயிச என்னுமிடங்களைப் பொல்ஷ் சாதியாரே பிடித்திருக்கின்றனர். வெயில் என்னுமிடத்திற்சமீபத்தாகக் கடும்யுத்தம் நிகழ்கின்றது.

துருக்கி.

துருக்கிய கலகக்கட்சியார் மெர்சிஞ என்னுமிடத்தைத்தாக்கியபோது பிராஞ்சிய கப்பல்கள் அவர்கள்மீது குண்டுகள் பெய்தனர்

ஜர்மனியிற் கலகம்.

ஜர்மனியிற் பலவிடங்களில உணவுப்பொருள்கள் மிகவும் விலையேறிக்கொண்டமையினால் ஜனங்கள் கடைக்காரர்களைத்தாக்கி கடைகளுட்புகுந்து பொருட்களைக் கொள்ளை கொள்ளுகின்றனராம்.

கடிதம்.

திரு கந்தசுவாமிமலை
திருச்சிற்றம்பலப் பிள்ளையார்
திருப்பணி விஞ்ஞாபனம்.

தமிழ்வேதமாகிய தேவாரத்தைப் பாடியருளிய சமயகுரவரால் புகழ்ப்பெற்ற இரு ஸ்தலங்களில் ஒன்றானதும், மூர்த்திதல தீர்த்தங்கள் ஒருங்கே அடையப்பெற்றதும், மலைவளம் கடல்வள மென்னுஞ் சிறப்புகளுடன் திவ்வியக்ஷேத்திரவிசேஷம் இயல்பாயமைந்து கன்னபாரம்பரியமாய் இன்றும் அகஸ்தியர் ஆச்சிரமமென வழங்கப்பெறுவதும், வல்லபசத்திஸ்தாபனம் பிரத்தியேகம் அமைந்துள்ளதுமான ஓர் விநாயகர் ஆலயம், இத் திருக்கோணமலையில் நெடுநாளாய்ச் சிலமடைந்திருப்பதைக் கண்ணுற்ற அயலகத்தாரில் ஒருவராகிய ஸ்ரீ. மு. கதிரவேலு, விநாயகப்பெருமானின் திருவருளை முன்னிட்டு, திருக்கோயிலை விளங்கச்செய்யும் அவாவுடன், வறுமையைப் பொருட்படுத்தாது, தம்மாற்றலுக்கியைய, சில திருப்பணிகளை முடித்துவைத்தனர். ஏனைய பணிகளைச் செய்வான் வேண்டிய முயற்சிகளைப் பின் பலமுறை எத்தனித்தும் பயன்பட்டில. அதனுந் துன்புற்றிருக்குங்கால், கதிர்காமம், ஸ்ரீ. ஆனந்த மாணிக்க சாது என்பார் அங்ஙனம் வந்து கோவிலின் ஓர் புறத்தே நிஷ்டைகூடியிருந்து, ஆலயத்தில் அவசியம்ஏற்படவேண்டிய ஒழுங்குகளைத் திட்டஞ்செய்துவைத்தார். அன்றியும், இத்தலம், மேற்பன்னீராண்டில், சாது ஒருவரின் வாக்கின் காரணமாய்க் கண்ணியமடைந்து பிரபல்யப்படுமெனவுஞ் சொல்லிப் போந்தனர். சாது அவர்கள் கூறியவிதம், ஸ்ரீ மௌனசாமி என்னும் ஓர் யௌவன சாது அவண் விஜயஞ்செய்து சிலதிருத்தங்களை ஆலயத்தில் இயற்றநோக்கங்கொண்டு, இன்றியமையாப் பிரயத்தனங்களைக் கையாடிவருகின்றனர்.

இத்திருப்பணி நிறைவுறற்கு, சைவாபிமானிகளின் துணை ஆவசியகம் வேண்டியிருக்கின்றது. ஆகவே, சிவானுபூதிச் செல்வராம் பிரபுக்கள், மனப்பூர்வமாக இயன்ற பொருளுதவி, சுவாமியவர்கள் இக்கோருகையின்வழி, ஆலயஞ் சிறப்புற அனுகூலமாயிருக்கும்படி மிகுதியும் பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்,
திருக்கோணமலை, சி. வேலுப்பிள்ளை,
ரௌத்திரிஞ ஆனிமீ ௮வ.

பலிகொடுப்பது
தெய்வத்திற்கா, மனிதருக்கா?

இதனை வாசிக்கும் அன்பர்காள்!

தமியேன் இற்றைக்குச் சிலமாதங்கட்குமுன் குக்கல் என்னும் நோயாற் பீடிக்கப்பட்டு மிகவும் வருந்தினேன். எனது சுற்றத்தார் அந்நோயைமாற்றுவதற்கு மிகவும் பிரயாசப்பட்டுமந்நோய் நீங்கவில்லை இவ்விதமாகத் தமியேன் வருத்தமடைந்துவருநாளி லொருநாள், தமியேனது பூர்வபுண்ணியப்பயன்வந்தடைதலும், ஒரு பெரியவர், ஏழையேனது இல்லத்தை நோக்கி வந்தார். உடனே அவரை யான் மிகவுமன்புடன் வரவேற்று ஆசனத்திருத்தி உபசரித்துநமஸ்கரித்தேன். அவரைக் கண்ட எனது பெற்றோர் எனக்குற்ற நோயையும் அதனால் யான் படும் உபத்திரவத்தையும் அவருக்குச் சொன்னார்கள். அப்பெரியவர் சிறிதுநேரம் யோசித்து என்னை நோக்கி, 'மைந்தனே! இந்நோய் நீ முற்பிறப்பிற் செய்த கன்மவினையின் பயனுக்கீடாக வந்திருக்கின்றது. இதற்கு நீ ஓர் செப்புத் தகட்டில் ஒரு நாய்க்குட்டியினது ரூபமொன்றமைப்பித்து உன் கழுத்திற் கட்டுவதுடன், ஓர் குக்கலையும் மாரியம்மனுக்கு நேர்த்திசெய்து வேள்விக்கினத்திற் பலியிடுவாயாகில் இந்நோய் சீக்கிரத்திற் சுகப்படும் என்று சொல்லி விபூதி யளித்தனர் தமியேன் அன்புடன் அவ்விபூதியை வாங்கித் தரித்துவிட்டு அவரை நமஸ்கரித்த பின்னையில், அவர் நாயேனிடம் விடைபெற்றுக்கொண்டு தான் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றனர். மறுநாட் பெரியவர் கூறியவண்ணம் ஓர் காசில் குக்கலின் ரூபமொன்றை யமைப்பித்து என் கந்தரத்திற்றரித்து, பாலையும் பழிக்கும் வெண்ணிறமுள்ள ஒரு "சூரன்" என்னும் நாயையும் அம்மனுக்கு நேர்த்திசெய்துவிட்டேன் அவ்விதஞ்செய்த இருவாரங்கட்குள் என் நோய் பாநுவைக்கண்ட பனிபோல் நீங்கிற்று தமியேன் அடங்கா மகிழ்ச்சியுடன் சுணங்கனை நாளொருவண்ணம் பொழுதொருமேனியுமாக வளர்த்துவந்தேன். கல்விரத்தமில்லாத சுணங்கனைத் தொல்புரத்திற்கெனநேர்த்திசெய்ததாட்டொடக்கம் அச்சூரன் சக்கிலபட்சத் தம்புலி போல வளர்ந்துவந்தான். வருநாளில் ஒருநாள், ஆனிமீ பதினைந்தாந்தேதி வேள்வி எனப் பேரிகை முழக்கலாயிற்று. தமியேன் அத்தினத்திற்கு என்சுணங்கனை நன்கலங்கரித்து, என் சுற்றத்தாருடன் பொங்கற்பானையையும் அங்கவஸ்திரத்தையு மெடுத்துக்கொண்டு, சூரனையு மொருதாரத்திற் பிடித்துக்கொண்டு ஆலயத்தைச் சென்றடைந்தேன். அடைந்து என்னுடன் வந்தவர்[illegible] சிலரைப் பொங்கல்செய்ய நியமித்துவிட்டு, யான் என் சுணங்கனுடன் மேடைக்குக் [illegible] வெட்டிப் பலியிடுமிடத்திற் களித்தாய் நின்றேன். ஆண்டு புருவையுங் குருவையும்வெட்டும் ஓர் புண்ணியசீலன் மிகப் பிரமாண்டமான கத்தியொன்றினால் நூற்றுக்கணக்கான வாரணங்களையும் வற்காலிகளையும் வெட்டி வீழ்த்தி நின்றான். இறுதியில் தமியேனும் யான் பொங்கிய அமுதினைப் படைத்துக் கதலிப்பழத்தையுமுரித்துவைத்து நாயையும் புண்ணியசீலன் முன் கொணர்ந்து அதனை வெட்டும்படி கோரினேன். அந்தோ! அச்சீலன், "அடே பேயா, அம்மனுக்கு ஆடுகோழிகளையன்றோ பலிகொடுப்பது அவ்விதமுலகமிருப்ப நீ நாயையாகொணர்ந்தாய், பித்தா!" என ஆவேசங்கொண்டு என்னை வைது என்னுடைய பொங்கற்பானையையு முடைத்தனன். தமியேன் எனக்குற்ற நோயையும் பெரியவருடைய வாக்குப்பிரகாரம் அந்நோய் மாறியதையுஞ் சொல்லிப் பெரியவர்வாக்கை நிறைவேற்றுவதற்கு என் சுணங்கனை வெட்டிப் பலியிடுமாறு வேண்டினேன். அச்சீலன் முன்னரிலு மதிக வெகுளியுற்று, அக்கோயிலதிகாரிகளையும் அர்ச்சகர்களையு மழைத்துவந்தான். அவர்கள் என் வரலாற்றை முற்றும் விசாரித்து, "உலகில் "உன்போல ஒரு பேதை இல்லை' என்று சொல்லிச் சுணங்கனை வெட்டுவதில்லை என்று தீர்ப்புச் சொன்னார்கள். அப்பொழுது கோயிற் குருக்களும் வந்து வாயிற் கைவைத்து என்னை நோக்கி, "அடா! பிதற்றுப் பிடித்தவனே! என்ன மடமையிது! தெய்வங்கட்குப் பலிகொடுப்பதற்கு ஆடு கோழி முதலியனவன்றி, நாயையும் கொடுக்கவேண்டுமென்று ஒரு நூலிலுஞ் சொல்லப்படவில்லை. "நாயைக் கோயிலுக்கு நேர்த்தி செய் என்று சொன்ன பெரியவருக்கும் உனக்கும் மூளைப்பிசகிருக்கவேண்டும்' என முனிவுடன் பகர்ந்தார். அதற்கு யான் "ஐயாவே! ஆட்டிற்கு நாலு காலும் நடுவே ஒரு வாலுமுண்டு. அதுபோலவே என் சுணங்கனுக்கும் நாலுகாலும் ஒரொரு வாலுமுண்டு. ஆதலால் என் நேர்த்தி பூர்த்தியாகும்வண்ணம் விடை கொடுக்கள்' என்றேன். அப்பொழுது அர்ச்சகர் "அறிவில்லாத மூர்க்கனே! உலகில் மனிதரும் விரும்பாத நாயையா எல்லாம்வல்ல ஈஸ்வரிக்குப் பலி கொடுக்க நினைத்தனை, நன்று! நன்று! உன் மதி' என மொழிந்தனர். அதற்கு நாயேன் "என்குருவே! தேவரீர் ஆடுகோழிகளை உண்ண விரும்புகின்றீர்களா?' என்றேன். அர்ச்சகர் அதற்கு "இல்லை" என்றார். யான் "ஐயாவே! தாங்கள் விரும்பாத எளிய புலாலைத் தங்களினும் கோடிமடங்கு வல்லமையுள்ளவரும் எங்கும் நிறைந்தவருமாய ஈஸ்வரித்தாய் விரும்புவதெங்ஙனம்? சிருஷ்டி திதி சங்காரம் என்னும் முத்தொழில்களையு மியற்றும் அவ்வம்மையார் விரும்பும் புலாலைத் தாங்கள் விரும்பாது பாவமெனநீக்கிவிடும்பொழுது, தாங்களன்றோ அந்த ஈஸ்வரியினும்பார்க்க உன்னதமானவர்கள். பக்திமார்க்கமாக ஸ்ரீமந் கண்ணப்பசுவாமிகளும் தாம் விரும்பியுண்ட இறைச்சியையே குடுமித்தேவருக்கு நிவேதித்தனர். அவ்விதஞ் செய்தமையினால் அவர் தமது பிறவித்துன்பத்தை ஆறுநாட்களுட் கூறுசெய்து முத்தியின் பத்தையெய்தினர். ஆயின் தாங்கள் இழிவுபடுத்தும் எளிய புலாலை அருவருப்புடன் அம்மனுக்கு நிவேதிப்பதினாலன்றோ பிறவியை யொழிக்க இயலவில்லை அம்மனுக்கு ஆடுகோழிகளது குருதியுண்ண இச்சையுண்டேல், சிங்கம் தானன்றோ குட்டிகளைத்தானே விரும்பி உண்பதுபோல் ஈஸ்வரியும் தாம்படைத்த ஆடுகோழிகளைத் தாமே வதைசெய்து உண்டு களிக்காரோ? மனிதர் வெட்டத்தாமுண்ணவேண்டுமெனின் அவ்வம்மையாருடைய சர்வ வல்லமைக்கும் உலகில் உள்ள ஆண்மகோடிகட்கெல்லாம்ஒரேயொரு தாய் என்பதற்கும் இழுக்கன்றோ?............' என்று சொல்லி இன்னுஞ்சில சொல்லுவதற்கிடையில் அக்கோயிலதிகாரி அவ்விடத்தையடைந்து தமியேனை நோக்கி "மைந்தனே!! இங்கே அதனைப்பிரசங்கஞ்செய்து நின் கல்வித்திறத்தைக் காட்டவேண்டாம். இங்கே நாய் பலியிடும் வழக்கமில்லை. மனிதரும் இச்சியாத எளிய நாயை அம்மனுக்கு அவிப்பாகக்கொடுக்கும் வழக்குமில்லை. ஆகையால் யான் நீ என்ன சொன்னபோதிலும் உன் சுணங்கனை இங்கே வெட்டவிடமாட்டேன். சீக்கிரம் உனதுகணங்களுடன் உனதுவீட்டை நோக்கக்கடவாய்" என்றார். யான் அதற்கு மானேசரை நோக்கி ஐயாவே!! அடியேன் கல்வியறிவில்லாத ஒரு மூடனும். தமியேன் கற்றவனல்லன். பிரசங்கஞ் செய்யவல்லவனுமல்லன். நிற்க, தாங்கள், மனிதரும் விரும்பாத நாயை 'அம்மன் விரும்புமா? என்கிறீர்களே, ஆயின் இக்கோயிற் குருக்களுந்தாங்களும் இன்னும் சில "சைவர்" எனப் பெரிய மாந்தரும், அம்மன் புசிக்கும் ஆடு கோழிகளை மிகவும் இழிவுபடுத்தியுண்ணாது தள்ளிவைக்கின்றீர்களே, ஆயின் என்நாய் அம்மனுக்கு அசங்கிதமும் பிரீதியின்மையுமெனத் தாங்கள் அதனை வெட்டவிடாது தடுப்பது போற் குருக்களுஞ் சைவரும் விரும்பாத மேடுகுக்குடங்களையும் அம்மனுக்குப்பிரீதியில்லை என அவற்றை வெட்டவிடாது தடுத்தலன்றோ நீதி. நாய்களை விரும்பியுண்ணும் "சீனர்" என்னும் வகுப்பினர் தங்களுக்குள் ஒருஆலயத்தை ஏற்படுத்தித் தங்களுடைய தெய்வத்திற்குத் தாங்கள் விரும்பியுண்ணும் நாய் மிகப் பிரீதி என்றுகட்டுப்பாட்டுடன் நாய்களை வெட்டிப் பலியிட்டுண்பரேல், அதனை உலகம் ஏற்றுக்கொள்ளும். ஆயின் புதிதாகநாயைப் பலிகொடுக்கவேண்டுமென என்நோய் காரணமாக யான் விரும்பியதைப் பலிகொடுக்கத்தங்களது மனம் ஒப்பவில்லை. தங்கள் ஆடுகோழிகளை வெட்டவிடாது தடுக்காது. என் நாயை மாத்திரம் தடுப்பதை உற்று யோசிக்குமிடத்து ஆடுகோழிகளைப் பலியிடுவது தெய்வத்தின்வயிற்றிற் கன்று மனிதரினது வயிற்றிற்காமென்பது நன்குபெறப்படும்." என்று யான் சொல்லிநிற்குஞ் சமயத்தில் அக் கோயில் மானேசரின் மைந்தன்வந்து "இவ்விடத்திற் சட்டப்பிரமாணங்கள் கூறவேண்டாம். நாய்களைப் பலியிடுவதில்லை என்று சொன்னபின்னு மென்ன தர்க்கம் என்று என்னை நோக்கிக்கூறித் தமியேனையுஞ் சுணங்கனையும் பிடர் பிடித்துத் தள்ளிவிட்டனர். யான் எனது வீட்டைநோக்கி வரும் வழியில் எங்களது சம்வாதத்தைக் கேட்டுக்கொண்டுநின்ற ஒருவர் "அம்மன் தான் படைத்த ஆடுகோழிகளைத் தாமே உண்டு களித்தல் கூடாதா?' என்றீர் அவ்விதமாயின், அந்தணர் அமுதினையும், அபூபங்களையும், பழவர்க்கங்களையும் பாகஞ்செய்து சுவாமிக்கு நிவேதித்துப் பாலால் அபிடேகஞ் செய்வதென்னை? பால் பழங்களாதியவற்றைச் சுவாமி உண்டாக்கவில்லையா? அப்போது சுவாமி இன்னொருவரைக் கொண்டு பழம்பறிப்பித் துண்ணுவதிலும் தாமே யவற்றையுண்டு உவகைகொண்டிருக்க வியலாதவரா" என்று தமியேனை நோக்கிக் கேட்டார். அதற்கு யான் "மனிதர் மாயாசம்பந்த முடையவராக விருக்கின்றனர். கடவுள் ஒருவர் உண்டென்பதை என்றும் நினைத்தல்செய்ய இயலாதவர். ஆகையினால் மனிதர் தாமுண்ணுவதெவற்றையுங் கடவுளுக்கு நிவேதித்து உண்ணவேண்டுமென்பது சுருதி யுத்தி யனுபவங்களினால் நன்கு பெறப்படும். அன்றியுங் கடவுள்மீது அன்பு வளர்ச்சிக்காகத் தினமும் பூசைகள்புரிந்து புற்கைவாழைப்பழம் வைத்துகொஞ்சம் நெக்குநெக்குருகச் சொக்கநாதனைத் தோத்திரஞ்செய்து அமுதினையுண்டல் ஓர் அறச்செயலும் அன்புவளர்ச்சியுமாகும். ஆயின் ஈண்டு ஆடுகோழிகளையும் அன்புவளர்ச்சிக்காக வெட்டியுண்கின்றேம் என அவற்றை இச்சையுடன் புசிக்கும் மனிதர் சொல்வாராயின் அம்மொழி பசுகளைகிறதென்று வேக்கை தேம்பித்தேம்பி அழுவதை நிகர்க்கும். அன்றியும் அஃது ஓர் அறச்செயல் எனச் சற்றுங் கணிக்கப்படாது; பெரும் மறச்செயலாகக் கற்றறிந்த பெரியோர் கணித்தறிந்துகொள்வர்' என்றேன். அதற்கவர் யாதும்பகரவில்லை. எனதன்பர்களே! என் நாயை வெட்டவிடாது தடுத்ததுபோல் அவ்வதிகாரி தாம் விரும்பாத ஆடுகோழிகளைத் தமது தெய்வம் விரும்புவதெங்ஙனம் எனப் பகுத்தறிந்து அவற்றை வெட்டவிடாது தடுப்பரேல் அவருக்கு அடியேன் அளவிறந்த அன்புநிறைந்த நமஸ்காரம் புரிவேன்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று." கடித.

திருவாசகம்.

திருவாசகம் அருள்வாக்கு. இது சிவபெருமானுடைய திருவருள் செலுத்தத் திருவாதவூரடிகளுடைய திருவாய்மலரில் நின்று ஒழுகிய செழுந்தேன். வேதங்களிற்போல இதனகத்தும் பல அந்தரங்க உண்மைகள் 'இலைமறைகாய் போலப்' பொதியப்பெற்றுள்ளன.

இந்த அருள்வாக்குத் தோன்றியபின் தமிழ் நாட்டின்கண் எத்தனையோ வித்துவான்களும் எத்தனையோ சமய சாத்திர பண்டிதர்களும் தோன்றி விளங்கினராயினும், இவர்களுள் ஒருவராவது இதனுக்கு உரைகாண இதுகாறுந் துணிந்திலர்; திருவாதவூரடிகள் செய்தருளிய திருக்கோவையாருக்குப் பேராசிரியர் ஒரு உரை செய்தாராயினும், அவ்வுரை அதன் வெளிப்பொருளாகிய பொருளிலக்கண அமைதியை எடுத்து விளக்கினதன்றி, அதன் உட்பொருளாகிய ஞானார்த்தத்தை எடுத்து விளக்கத் தலைப்படவில்லை. அருட்பெருந்தகையாகிய சேக்கிழார் சுவாமிகளே

"வெறியார்பொழிற்சண்பையர்வேந்தர்மெய்ப் பாசுரத்தை, குறிபேறியவெல்லையறிந்து கும்பிட் டேனல்லேன், சிறியேனறிவுக் களவிருப்பாதந் தந்த, நெறியே சிறிது யானறி நீர்மையிற் கும் பிட்டேனால்."

என்று அருள்வாக்குகளின் பொருட் கிடையை எடுத்துவிளக்கப் பெரிதும் அஞ்சினர் என்றால், நம்போல்வார் அவற்றின் பொருள் ஆழத்தைக் காணத் துணிவது எங்ஙனம்!

ஆயினும் நாம் எல்லாம் பூர்வத்திற் செய்து வைத்த புண்ணியத்தாற்போலும், இப்போது பல்லாவரம் சமரசசந்நிதானமாகிய சுவாமி வேதாசலமவர்கள் திருவாசகத்துக்கோர் உரைகாணத் திருவுளங் கொண்டார்கள். சுவாமிகளுடைய இலக்கண இலக்கியப் பயிற்சியைப்பற்றியாவது, அவர்களுடைய சமய நூலுணர்ச்சியைப்பற்றியாவது, அல்லது அவர்களுடைய உண்மை அனுபவ ஆற்றலைப்பற்றியாவது சிறியேன் சிறிதும் அறிந்திலேன். இந்த அறியாமைபற்றிப்போலும் சுவாமிகள் கண்டருளிய உரையிலே தமியேனுக்குப் பல மலைவுகள் நிகழ்வனவாயின. இந்த மலைவுகளுள் இரண்டொன்றை மாத்திரம் முன்னர் எடுத்துக்காட்டி, அந்த மலைவுகளைத் தீர்த்தருளுமாறு சுவாமிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

(க) சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய மானுடதேகிகள் உண்மை கடைப்பிடித்தற்கு ஈசுவரவாக்கியமாகிய ஆப்த வாக்கியம் இன்றியமையாதென்பதும், இந்த வாக்கியத்தோடு எங்கள் யுக்தி அனுபவங்கள் ஒத்திருந்தாலே அவைகள் உண்மை எனக் கொள்ளத்தக்கன என்பதும், இந்தப் பரதகண்டத்திலே பண்டுதொட்டிருந்த முனிபுங்கவர்களுக்கெல்லாம் முடிவான துணிபு. வேதசிவாகமங்கள் எல்லாம் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானால் திருவாய்மலர்ந்தருளப்பட்டன என்னும் எங்கள் சமயக்கொள்கை இந்தத் துணிபை நன்கு வலியுறுத்தும். வேதசிவாகமங்கள் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டன என்பது எங்கள் சமயசாத்திரங்கள் அனைத்துக்கும், எங்கள் சமயசாத்திர வியுற்பன்னர்கள் எல்லாருக்கும், எங்கள் சமய குரவர்கள் அனைவருக்கும் உடம்பாடாகியதொருகொள்கை. சுவாமி வேதாசலம் அவர்கள் தமது உரையகத்தே மேற்கோளாகப் பல இடங்களில் எடுத்துக்காட்டும் சிவஞானசித்தியார் கருத்தும் இதுவேயாகும்.

"வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்கள்
ஆதிநூலமலன் தருநூலிரண்டும்"
என்பது சித்தியார்.

சுவாமியவர்கள் உரையிடப்புகுந்த திருவாசகக் கருத்தும் இதுவேயாகும்:—

"பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடி" என்றும்,
"வேதமொழியர்வெண்ணீற்றர்" என்றும்,
"மூவாநான் மறைமுதல்வா" என்றும்,
"மறைநான்கே வான்சரடா" என்றும்

இன்னும் பலவாறாகவும் திருவாதவூரடிகள் இவ்வுண்மையை விளக்கி அருளினர்.

இங்ஙனமாகவும் எங்கள் சமரச சந்நிதானச் சுவாமியவர்கள் வேதசிவாகமங்கள் எல்லாம் மானுடவாக்குகளன்றிச் சிவவாக்கன்றெனவும், அவற்றைச் சிவவாக்கென்பது உபசாரமாத்திரையேயன்றி உண்மையன்றெனவும் கூசாது சாதிக்கின்றார்கள். இங்ஙனஞ் சாதிப்பது வேதாகம நிந்தையாகிய மாபாதகமாகாதோ? வேதாகமங்களைச் சிவவாக்கென்பது உபசாரமாகுமாயின், கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும் உபசாரமெனக்கொண்டு நாம் லௌகிக ஞானிகளோடு சமரசமாய் உண்டாடிக் கொண்டாடலாமே! லௌகிக ஞானிகளைத் திருப்திப்படுத்தவேண்டி இங்ஙனஞ் சமரசஞ்செய்யத் துணிவது இல்லறத்திருந்துகொண்டு துறவுபூண்பது போலும் ஓர் அபசாரமாகாதோ? சுவாமிகள் விளக்கியருள்வாராக.

(உ) இனி ஆகமங்கள் பிற்காலத்திருந்த சில விசேஷிகளால் செய்யப்பட்டனவென்று இக்காலத்துள்ள லௌகிகஞானிகள் சிலர் கூறுங் கூற்றையும் எங்கள் சுவாமியவர்கள் உவகையோடு உடன்பட்டுக்கொண்டு, அக்கூற்றுக்கு ஆதாரமுங்காட்ட ஆரம்பித்துக்கொண்டார்கள். திவாகரத்திலே ஆகமங்களின் பெயர் காணப்படாமையால், திவாகரம் செய்யப்பட்ட காலத்திலே ஆகமங்கள் இருந்தில என்று எங்கள் சுவாமிகள் சரித்திர ஆராய்ச்சியும் (Historical Research) செய்யத் தலைப்பட்டுக்கொண்டார்கள். ஆனால், திவாகரத்திலே புராணங்களுடைய பெயர் காணப்படுதலாலும், அந்தப் புராணங்களிலே ஆகமங்களுடைய பெயர் பல இடங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருத்தலாலும், சுவாமிகளுடைய திவாகரச்சாட்சி என்ன பிரயோசனமுடைத் தென்பதையும் அவர்களே விளக்கிக் காட்டுமாறு பிரார்த்திக்கின்றேன். ("வேலிக்கு ஓணான் சாட்சி"—'ஆகமத்துக்குத் திவாகரஞ் சாட்சி'போலும்!)

(ங) சுவாமிகள் திருவாதவூரடிகளையுந் திருத்த முயலுகின்றார்கள்! திருவாதவூரடிகள் "புல்லாகிப் பூடாய் .... கல்லாய் மனிதராய்" என்றெடுத்துப் பிறவிபேதங்களை வகுத்துக் காட்டியது தவறுடைத் தென்னுங் கருத்துடையாராய், எங்கள் சுவாமிகள் "கல்லாய்" என்பதற்குக் "கற்பாறைகளின் உள்ளாய்" என்றோர் சமாசார்த்தம் படைக்கின்றார்கள். இந்த அர்த்தம், அந்த இடத்தில் "ஆய்" விகுதிகொண்டு முடிக்கப்பட ஏனைய சொற்பொருள்களோடு இயைபுடைத்தாகுமோ என்பதைச் சுவாமிகள் சிந்தித்திலர் போலும்! அதுகிடக்க. "உயிரும் அதுபற்றிவரும் உறுப்பு வளர்ச்சியும் மலைகள் உடையன என்பது இக்காலத்து இயற்கைப் பொருணூல் ஆராய்ச்சியால் சிறிதும் பெறப்படாமையின்" மலைகள் உயிருடைப் பொருள்கள் எனப்படமாட்டா என்று எங்கள் சுவாமியார் தமது இயற்கைப்பொருணூற் பாண்டித்தியத்தையும் புலப்படுத்தத் துணிகின்றனர். சுவாமியாருடைய கருத்து முழுதும் இயற்கைப் பொருணூற் கொள்கைகளாகிய லௌகிக ஞானத்தைத் திருத்துவதல்லாமல், சமயத்தைத் திருத்துவதல்ல என்பது பூரணமாகத் தொனிக்கின்றது. இதுவேயோ சுவாமியார் செய்யும் சமரசம்! சமயத்துள் மறைந்து நின்று சமயத்தைக் கெடுப்பதா சமரசம்? சிச்சீ. சுவாமியாருடைய இயற்கைப் பொருணூலறிவு தானும் "அற்ப அறிவு ஆபத்துக்கிடம்" (A little knowledge is dangerous) என்னும் ஆங்கில முதுமொழிக்கே இலக்கியமானதாக எனக்குப் புலப்படுகின்றது. கற்பாறைகளும் சேதநப் பொருள்களே (Organic beings) என்பதும் அவற்றுக்கு வளர்ச்சியுண்டென்பதும் பள்ளிக்கூடங்களிற்கற்கும் சிறுவர்களும் அறிந்த உண்மைகளாக, எங்கள் சுவாமியார் லௌகிகஞானத்திற்கொண்ட பெருமோகத்தால் தமது அறிவிற்றோன்றுவனவனைத்தையும் லௌகிகஞானமெனமயங்கிச் சமயக் கொள்கைகளைத் தூரம்போக்கத்தொடங்கிக் கொண்டார். இதுதான் சுவாமியார் செய்யத் துணிந்திருக்கும் சமரசம்! கலிகால கோலத்தை என்னென்றெடுத்துச் சொல்லலாம்!! சுவாமிகள் என்னுடைய மலைவுகளைத் தீர்த்தருளுக.

இங்ஙனம்,
ஒரு சமயபக்தர்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்.

ஆர்கலியுடுத்த அவனியின்மீது சகல சேதனராசிகளையும் படைத்தளித்தழிப்பவர் கடவுளேயாம். என்றாலும் படைத்தற்றொழிலுக்கு இரணியகருப்பனை ஏற்படுத்தியதுபோலக் காத்தற்றொழிலுக்கும் அரசனை ஏற்படுத்தியிருக்கின்றார்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும்."

என்று பெருநாவலரும், "அனைவோர்க்குந் தெய்வம் இலை [illegible]" என்று குமரகுருபர சுவாமிகளுங்கூறியிருப்பதை உய்த்துணர்ந்து நோக்கின், அரசன் கடவுளுடைய அம்சமே, அல்லது கடவுளுடைய பிரதிநிதியென்று ஏற்படுகின்றது. இதுபற்றியே,

"மானிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை, தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால், ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பானல்லனோ." என்று சேக்கிழார் சுவாமிகளும் பெரியபுராணத்துட் கூறியுள்ளார். எங்கள் இராசசக்கரவர்த்தியாகிய ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரானவர், டில்லிமாநகரத்தில் மகுடாபிஷேகஞ்செய்தஞான்று, கணிப்பற்ற மன்னர் மண்டலிகர் குழுமியிருந்த அவைக்களத்தின்கண்ணே, "தன்னாலும், தன் பரிசனங்களாலும், பகைவராலும், பிற உயிர்களாலும் யாதொரு தீங்கும் நிகழாவண்ணம் தன்னுயிர்போல மன்னுயிரையும் புரப்பதே தன்மேற் பொறுத்த கடமையாகும்" என்று உறுதிமொழி கூறியிருக்கின்றார். அங்ஙனமாய நீதிவேந்தனது தவளச்சத்திர நிழலின்கண்ணே விளங்கும் நம் யாழ்ப்பாண நாட்டில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் பராமுகத்தினால் அருகிவருதல் தகுமா? நெற்பயிர்களை மூடிய களைகளை நிர்மூலஞ்செய்யாவிட்டால், நெல்வேளாண்மை செழித்தோங்குமா? தன் குட்டிகளுக்கு ஏனைய மிருகங்களால் இடையூறுற்றால், தாய்ச்சிங்கஞ் சகித்துக்கொண்டிருக்குமா? சாதுக்களுக்கு உறைவுளாகிய நமது யாழ்ப்பாணமானது தற்காலம் அறிஞர் கடிதற்கு அருவருக்கத்தக்க பஞ்சபாதகங்களும் நிறைந்த அநியாயமாய் மாறிவிட்டது. இங்ஙனமாகப் பசு புலியாகமாறியதற்கேது யாதென்றால், "அரவுயர்த்தோன் கொடுமையினு மரசுயர்த்தோய் நின்னருளுக் கஞ்சினேனே" என்று வீமசேனன் கூறியவாறு, எங்கள் காருண்ணிய கவர்ன்மேந்தார் பண்டைக்காலத்திற் கையாண்டுவந்த துஷ்டநிக்கிரகத்துக்கு முதற்கருவியாயுள்ள சந்திகளில் மொட்டைமரத்திற் கட்டியடிக்குஞ் சவுக்கடியை நிறுத்தித் தண்ணளிகாட்டியதேயாகும். துஷ்டர்களுக்குக் காராக்கிரகவாசம் விதித்தல் அவர்களை நன்கு திருத்தக்கூடிய பெரிய தண்டனையன்று. அவர்கள் மறியல்வீட்டைத் தங்கள் சொந்தவீட்டிலும் மேலாக மதித்து மறியற்காலங் கழிந்து புறப்படும்போது, மறியல்வீட்டுச் சேவகர்களை விளித்து, "நான் உண்ட [illegible], தரித்த சட்டையையும், மற்றும் ஏனைய உபகரணங்களையும் இன்னொருவருக்குங் கொடுத்துவிடவேண்டாம், யான் சமீபத்தில் வந்துவிடுகிறே"னென்று எச்சரிக்கை செய்துவிட்டு வருகிறார்களாம். அங்ஙனமாய அம்பாரத்துக் காராக்கிரகதண்டனை நெருப்பிலே நெய் பெய்த தன்மையை யொத்திருக்கின்றது. பகுத்தறிவற்ற அவர்களுக்குக் கொஞ்ச அபகாரவுஞ் செய்துவிட்டாலோ "அமாவாசைக் கருக்கலில் பெருச்சாளிக்குப் போனதெல்லாம் வழி" என்பதுபோல, பின்முன் யோசியாது எத்தனைய தீயசெயல்களையும் சடுதியிற் செய்து முடித்துவிடுவர்.

சாமபேத தான தண்டம் என்னுஞ் சதுர்வித உபாயங்களுள் துஷ்டர்களுக்கு ஏற்றதாகிய தண்டோபாயமே அத்தியாவசியகம் விதிக்கற்பாலது. மற்றைய தண்டனைகள் அவர்களை ஒருபோதும் நன்னெறியிற் செலுத்தமாட்டா. அதுபற்றியே "அடியைப்போல அண்ணன் தம்பியுதவமாட்டார்" என்று உலகில் ஒரு முதுமொழியும் வழங்குகின்றது. அடங்காத குதிரையை அது வாயிலிருந்து விலாழிநீர் சிந்தி நன்றாகக் களைக்கும்வரை வண்டியிலே கட்டியடியாது, உயர்ந்த உணவைக் கொடுத்து, லாயத்திலே சொகுசாகக் கட்டி வைத்திருந்தால், எசமானுடைய எண்ணப்படி நடக்குமா? மிக்க குரூரகுணத்தோடு கண்டோர் அஞ்சும்படி படத்தைவிரித்துச் சீறியாடிக்கொண்டு நிற்கும் கொடுநாகத்திற்கு வலிய தடிகொண்டடிக்காலன்றி அடங்குமா? நாயகனுக்குக் கீழ்ப்படிவின்றி எதிர்மாற்றம் இயம்பும் நங்கைமாருக்கு வேத்திரப் பிரயோகமன்றி வேறு வழி பிரயோசனப்படுமோ? பொன்னை நெருப்பிலே காய்ச்சி அடிக்காலன்றி, அணிகலன் குயிற்ற அமைந்துவருமா? கரும்பை ஆலையிலிட்டு நசிக்காமல் வேறு மார்க்கத்தால் அது ரசத்தைத் தருமா? எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டினாலன்றி எண்ணெய் பிறக்குமா? இளநீரை இல்லியுண்டாக உடையாதிருந்தால், உள்ளிருக்கும் மதுரமான நீரைத் தருமா? அதுபோலத் துஷ்டரும் அடியினாலன்றி வேறொரு வழியாலும் அடங்க மாட்டார்கள். அதுபற்றியே

'ஈர்க்கைவிதிரார்கயவர் கொடிறுடைக்குங்
கூன்கையரல்லாதவர்க்கு"

என்று நாயனாருங் கூறியருளினார்.

இக்காலங்களில் பொழுது அஸ்தமயனமாகிவிட்டால் அறிஞர்கள் வெளியேபுறப்பட அஞ்சுகிறார்கள். ஒவ்வொரு சந்திகளிலும் மேற்காட்டிய அண்ணுத்தைமார் கூட்டங் கூட்டமாகநின்று சராமாரிபோலக் காதாற் கேட்கமுடியாத அசப்பிய மொழிகளும், அத்தப்பிரயோகமுஞ்செய்து முன்னே கொழுவிக்கொள்ளுகிறார்கள். அதன்பின் "தென்றல் முற்றிப் பிரசண்டமாருதம் ஆனதுபோல" இரண்டு பகுதியாரும் அணிவகுத்துக் கத்தி பொல்லுக்கொண்டு அமருடற்றிப் படுகொலைகளும் நடத்துவிடுகின்றன. இத்துஷ்டர்களுக்கு நம்மைத் தண்டிக்க அரசாட்சியார் இருக்கிறார்கள் என்ற அச்சம் அணுத்துணையாவது இருந்தால், சிறைஇரக்கமின்றி இங்ஙனமாய படுகொலைகள் புரிய எத்தனிப்பார்களா? அப்படியான கொலைகள்நிகழ்ந்த சமயங்களில் 'அரண்மனையிற்கோழிமுட்டை குடியானவன்வீட்டு அம்மிக்கல்லை உடைத்ததுபோல' சிலர் தர்மபங்கருதி எதிரிகளைத் தப்புவிக்க முன்வருகிறார்கள். இதனாலுந் தீச்செயல்கள் அதிகரிக்கின்றன. சுமார் 20, 25-வருஷங்களின் முன்னே, கொழும்பு கண்டி காலி முதலிய சிங்கள நாடுகளிலேதான், கொலை களவு முதலிய துஷ்டச் செய்கைகள் அமரிமிதமாக நடக்கின்றனவென்று சொல்லுவார்கள். தற்காலம் யாழ்ப்பாணத்திலோ அந்தப் பட்டினங்களிலும் பார்க்கக் கொலை களவு ஆதியாந் தீயசெயல்கள் காலத்துக்குக் காலம் கணக்கின்றிப் பெருகிவருகின்றன. இவை யாவுக்கும் அரசாட்சியார் சவுக்கடி விதிப்பதைக் கையாளாமல் விட்டதே காரணமாகும். ஆதலால் எங்கள் கருணை நிறைந்த கவர்ன்மேந்தார், ஆன்மா நீங்கியபின் ஔஷதப்பிரயோகஞ்செய்ய நாடாது, இன்னுங் கொலை களவாதியாந் தீச்செயல்கள் பல்கிவளர் அதிகக் கேடடைதற்குமுன்னே பழமைபோலக் கயவருக்குச் சவுக்கடியும் விதிக்கவேண்டுமென்னுஞ் சட்டத்தைப் பாசுபண்ணித் துஷ்டநிக்கிரகமுஞ் சிஷ்டபரிபாலனமுஞ் செய்யும்படி மிகவும்வணக்கத்தோடு கேட்டுக்கொள்ளுகின்றேம்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

விளம்பரம்.

சாராயக் குத்தகை அறிவித்தல்.

இத்தால் அறியத் தருவது யாதெனில்:—இதன்பின்னும் வரும் சாராயக் குத்தகைகளை 1920-ம் ஆண்டு ஒக்றோபர்மாசம் 1-ந் திகதி முதல் 1921-ம் ஆண்டு செப்டெம்பர் மாசம் 30-ந் திகதி வரையாகிய பன்னிரண்டு மாச காலத்துக்கும் விலைக்குக் கொள்வனவுபண்ணுவதற்கான கேள்விப்பத்திரங்களைத் திறந்து யோசித்துப்பார்க்கும் பொருட்டு, மந்திரசபை மண்டபத்திலே இதன்பின்னும் வரும் நாட்களிலே, உத்தம ஆட்சியதிகாரியவர்களால் நியமிக்கப்பட்டதொரு போட் சமாஜங் கூடப்பெறும்:—

1920-ம் ஸ்ரீ ஜூலாய்மீ 9உ வெள்ளிக்கிழமை.

1. சப்பிரகாமமாகாணம் மூன்றுகோறளையும் கீழ்ப்புலக்காமமும்.
2. டை கேகாலை டிஸ்திரிக் பிரிவிக்காலுகோறளை.

2. தான் கொடுக்க ஆயத்தமாயிருக்கிற விலை இன்னதின்னதென்று கேள்விக்காரன் ஒவ்வொருவனும் தன் கேள்விப்பத்திரத்திற் சொல்லப்படவேண்டும்.

3. நியமித்த நாளில் மத்தியானம் பன்னிரண்டுமணிக்குப் பிறகு யாதொரு டெண்டர் கேள்விப்பத்திரமும் ஏறுக்கொள்ளப்படமாட்டாது.

4. மேற்காட்டியிருக்கிறபடியான இரண்டு குத்தகைகளுக்கும் தனித்தனி வெவ்வேறு கேள்விப்பத்திரம் போடவேண்டும்; கேள்விப்பத்திரத்திற் குத்தகையினது பெயரும் நம்பரும் ஆகிய இரண்டும் எழுதியிருக்கவேண்டும்.

5. சரியாகச் சீல்முத்திரை வைத்த கேள்விப்பத்திரங்களை, "சாராயக்குத்தகைக் கேள்விப்பத்திரம்" என்று தலையங்கமிட்டுக் கௌரவ அக்திங் கலோனியல் சகிறத்தார் பி. ஹோஸ்பரோ அவர்களுக்கு என்று மேல்விலாசமிட்டுத் தபால் மார்க்கமாக அனுப்பினும் அனுப்பலாம். அல்லது கேள்விக்காரன் தானே போட்சமாஜத்தாருக்கு நேரே முகமுகமாய்க் கண்டு கொடுக்கினுங் கொடுக்கலாம்.

6 சாராயக் குத்தகைகள் கடைசியாக விற்கப்பட்டபின்பு விற்பனவுச் சொற்றீசுக் கட்டுப்பாடுகள் திருத்திப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. விற்பனவுப் பொதுச் சொற்றீசு மாதிரித் தாள்களையும், தவறணைப்புது இடாப்புகளையும் இலங்கையிலுள்ள எந்தக் கச்சேரியிலேனும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். ஒருகாரியங் கவனித்துக் கொள்ளவேண்டியது; சொற்றீசுக் கட்டுப்பாடுகளின்படி விற்பனவு பண்ணப்படும் சிலாகிய உரித்து என்னவாகில் ஆக்குச் சாராயம் மாத்திரம் சில்லறையில் விற்கும் உரித்தொன்றே; கள்ளு விற்கும் உரித்து இதிற் சேர்ந்ததல்ல என்பதாம்.

7. இங்கிலீஷ்பேசஇயலாத கேள்விக்காரர்கள் போட் சமாஜத்தோடு பேசிக்கொள்ள விரும்பினால் தங்கள் தங்கள் துவிபாஷகரைக் கூட்டிவரவேண்டும்.

8 சட்டநிருபணசபைமண்டபத்தில் கேள்விக்காரன் நேரே தானேயாவது தனது அதிகாரம் பெற்ற காரியஸ்தர் மூலமாவது, வந்திருந்து தனது கேள்விப்படி ஒருமாசக் குத்தகைப்பணத்தை உடன்கையிலே கட்டவும் ஆயத்தமாயிருந்தாலன்றி யாதொரு கேள்விப்பத்திரமுங் கவனிக்கப்படமாட்டாது.

9 இரண்டுக்குக் குறையாத கேள்விப்பத்திரங்கள் ஒரே சமனான தொகையாகக் கேட்டிருக்கும்பக்ஷத்தில், போட்சமாஜத்தார் தமது இஷ்டப்படி இரண்டில் ஒன்று செய்யலாம். (க) அந்தக் குறித்த கேள்விக்காரர்கள்மாத்திரமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்தஏலத்தில் உடன்கையிலே தானே போட்டுக் குத்தகையை விற்பது; அல்லது, (உ) புதுக் கேள்விப்பத்திரங்கள் கேட்டு வாக்குவது.

10. எந்தக் கேள்வியையாவது கேள்விப்பத்திரத்தையாவது ஏற்பதற்கு அல்லது ஏற்காது விடுதற்குப் போட் சமாஜத்தாருக்கு அதிகாரமுண்டு. எவருடைய கேள்வி அல்லது கேள்விப்பத்திரம் ஏற்கப்பட்டதோ அவரே அந்தச்சலாக்கியத்தைப் பெற்றவராக வெளிப்படுத்தப்படுவர். அவர் அந்தச் சலாக்கியம் விற்கப்பட்ட சொற்றீசுக் கட்டுப்பாடுகளுக்கமைந்து நடக்கவேண்டும்.

11. கொன்ரோலர் அவ் றெவெனியூக் கந்தோரில் நேரே முகமுகமாயாவது காகிதம் எழுதியாவது கேட்டு விலையில்லாமல் இனாமாகக் கேள்விப்பத்திர மாதிரிகள் பெற்றுக்கொள்ளலாம்.

12. மேலதிகம் ஏதுஞ் சங்கதி அறியவேண்டுமானால், மதுபான பரிபாலனக் கமிஷனர்த் துரையை நேரே கண்டு கேட்டாலும் அவருக்குக் காகிதம் எழுதினாலும் அவர் அறிவிப்பார்.

உத்தமனார் கட்டளைப்படி,
பி. ஹோஸ்பரோ,
அக்திங் கொலோனியல சகிறுதரர்.
கொழும்பு கொலோனியல்சகிறுத்தார்கந்தோர்,
1920-ஸ்ரீ ஜூன்மீ 25உ. (106)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.